# Worksheet 3 for Academic year (2025 - 2026)

**Grade : 4**

**Subject: Tamil ( தமிழ் )**

**Date** _______________

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………………
அ) பல் + லாண்டு ஆ) பல் + ஆண்டு இ) பல + ஆண்டு ஈ) பல + யாண்டு

2. செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………………
அ) செய + லாக்கம் ஆ) செயல் + ஆக்கம் இ) செயலா + க்கம் ஈ) செயல் + லாக்கம்

3. இப்போது + எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்…………………………
அ) இப்போதெல்லாம் ஆ) இப்போது எல்லாம் இ) இப்போல்லாம் ஈ) இப்போ யெல்லாம்

4. பேசி +இருந்தால் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………………………
அ) பேசியிருந்தால் ஆ) பேசியிரு இ) பேசி இருந்தால் ஈ) பேசவிருந்தால்

5. வந்து + இருந்தது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்………………………
அ) வந்து இருந்தது ஆ) வந்திஇருந்தது இ) வந்திருந்தது ஈ) வந்தியிருந்தது

6. தெள்ளிய – இச்சொல்லின் பொருள்
அ) மெல்லி ஆ) இளகிய இ) முதிர்ந்த ஈ) அழகிய

7. ஆல் இச்சொல்லின் பொருள் ……
அ) வேல மரம் ஆ) ஆல மரம் இ) அரச மரம் ஈ) வேப்ப மரம்

8. கயம் இச்சொல்லின் பொருள் ….
அ) நீர் நிலை ஆ) பயம் இ) வானிலை ஈ) பருவநிலை

9. புரவி இச்சொல்லின் பொருள் ……………
அ) யானை ஆ) பூனை இ) ஆள் ஈ) குதிரை

10. பெரும்படை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………
அ) பெருமை + படை ஆ) பெரும் + படை இ) பெரு + படை ஈ) பெரிய + படை

11. நிழல் + ஆகும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………
அ) நிழல் ஆகும் ஆ) நிழலாகும் இ) நிழல்லாகும் ஈ) நிழலாஆகும்

II) எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவு செய்க:

1. பருவ மழை பெய்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவர், பெய்யாவிட்டால் …………………. அடைவர்.
2. எப்பொழுதும் உண்மை பேச வேண்டும், ……………….. பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
3. தோல்வி என்பது முடிவு அல்ல வெற்றியின் ……………...
4. கணினி மூலம் கல்வி கற்பது புதிய முறை. கரும்பலகை மூலம் கல்வி கற்றது ……………… முறை.
5. பிறருக்குக் கொடுத்து உதவுவது உயர்ந்த குணம். பிறர் பொருளைத் திருடுவது …………….. குணம்.
6. மருத்துவமனைகளில் சத்தமாகப் பேசாமல் ……………….. பேச வேண்டும்.

III) குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க.
(ஊர், நார், பார், போர், வேர், தேர், நீர், மோர்)

1. உலகம் என்பதன் வேறு சொல் –
2. திருவிழா என்றாலே இது இருக்கும் –
3. மக்கள் சேர்ந்து வாழுமிடம் –
4. இது இல்லாமல் உயிர்கள் இல்லை –

5. நீர் விட்டுத் தயிரைக் கடைந்தால் –
6. மரம், செடி, கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவுவது –
7. மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை விரிவுப்படுத்த அண்டை நாடுகளோடு தொடுப்பது –
8. பூத்தொடுக்க உதவுவது –

IV) சரியா தவறா?
1. புலி, முயலின் முன்னோரைக் கொன்று தின்றுவிட்டது.
2. முயல் புலிக்குக் கரும்பு கொடுத்தது.
3. விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக் கொண்டிருந்தது.
4. முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது.
5. முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறியது.

V) மொழிபெயர்ப்பு:

1. Ancestors -
2. Hungry -
3. Rule -
4. Animal
5. Sleep -
6. Pond -
7. Banyan tree -
8. Seed -
9. Elephant brigade
10. Cavalry -
11. Infantry

VI) வினா:

1. முயலின் கவலைக்குக் காரணம் என்ன?
2. விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?
3. முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியை என்ன செய்யக் கூறியது?
4. புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய கட்டுப்பாடு என்ன?
5. விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?
6. ஆலமரத்தின் விதை எவ்வாறு இருக்கும் என்று அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்?
7. ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?
8. வெற்றி வேற்கை பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?